TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம்: Tenkasi — PS: காவல்நிலையம்: Vigilance and Anti Corruption — Year: ஆண்டு: 2024 — FIR No.: மு.த.அ. எண்: 02/2024 — Date: நாள்: 10.01.2024

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended in Act 16 of 2018. — Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 08.01.2014 12.30 hrs — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 10.01.2024 — Time நேரம்: 08.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 10.01.2024 — Time நேரம்: 09.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Oral

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Kuthukkalvalasai. 5 Km North

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: V.S.REGANEESH BABU — (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: Tr.SASITHARAN

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 06.07.1980 — (d) Nationality : நாட்டினம்: INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்: ADVOCATE — (g) Address முகவரி: ISWARYA, ANJAL, KOLLAM DISTRICT, KERALA STATE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Sathiyaraj, Panchayat President, Kuthukkal Valasai Panchayat, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 10.01.2024-ம் தேதி காலை 08.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கேரளா மாநிலம் கொல்லம் மாவட்டம் ஐஸ்வர்யா, அஞ்சலை சேர்ந்த திரு.V.S.ரெஜினீஸ் பாபு என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி குத்துக்கல்வலசை ஊராட்சி தலைவராக இருக்கும் திரு.சத்தியராஜ் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் வாக்குமூலத்தில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 10.01.2024-ம் தேதி காலை 09.45 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2024 u/s 7 of the PC Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலத்தின் விபரம் பின்வருமாறு: திரு. V.S.ரெஜினீஸ் பாபு, வயது-43/2024, த/பெ. சசிதரன், ஐஸ்வர்யா,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. S. 10/01/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
10/1/24 at 11.00hrs

Name: பெயர் C. JAYASREE
Rank: நிலை INSPECTOR OF POLICE

அஞ்சல், கொல்லம் மாவட்டம், கேரளா மாநிலம் என்பவரது வாக்குமூலம். நான் கேரளா மாநிலம், கொல்லம் மாவட்டம், ஐஸ்வர்யா அஞ்சலில் குடியிருந்து வருகிறேன். எனது அத்தை சுமா அவர்களின் மகள் வந்தனா குமார் அமெரிக்காவில் சாப்ட்வேர் எஞ்ஜினியராக பணிபுரிந்து வருகிறார். அவர் கடந்த 2023 ஆம் வருடத்தில் தென்காசி குத்துக்கல்வலசை ஊராட்சிக்குட்பட்ட ராஜா நகரில் சர்வே எண்.903-ல் சுமார் 3.5 செண்ட் நிலத்தினை அவரது பெயரில் கிரையம் வாங்கியுள்ளார். மேற்படி இடத்தில் தரைதளம், முதல்தளம் சேர்த்து 2330 ச.அடியில் 23 லட்சம் மதிப்பில் வீடுகட்டுவதற்காக ரையான் பில்டர்ஸ், தென்காசி என்ற நிறுவனத்திடம் ஒப்பந்தம் போட்டுள்ளார். அந்த இடத்தில் வீடுகட்டுவதற்கு கட்டிட அனுமதி வேண்டி, கட்டிட வரைபடம், எஸ்டிமேட், பத்திரம் நகல், பட்டா நகல் ஆகியவற்றுடன் தென்காசி மாவட்டம், குத்துக்கல்வலசை ஊராட்சி அலுவலகத்திற்கு ரையான் பில்டர்ஸ் மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். மேற்படி கட்டிட வரைபடம் அனுமதி சம்பந்தமாக வந்தனா அவர்கள் குத்துக்கல்வலசை ஊராட்சி தலைவர் திரு.சத்தியராஜ் அவர்களிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசியபோது அவர் ரூ.1,05,250/- பணம் செலவாகும் என்று தெரிவித்துள்ளார். மேலும் வந்தனா அமெரிக்காவில் இருப்பதால் அவரால் பார்க்க முடியாததால் கட்டிட அனுமதி சம்பந்தமான அனைத்து வேலைகளையும் என்னை பார்க்க சொன்னார். நான் 08.01.2024 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் குத்துக்கல்வலசை ஊராட்சி அலுவலகத்திற்கு சென்று திரு.சத்தியராஜ் அவர்களை நேரில் பார்த்து கட்டிட அனுமதி தொடர்பாக பேசியபோது, அவர் கட்டிட அனுமதிக்கு ரூ.59,250/- என்ஜினியர் மூலம் ஆன்லைனில் செலுத்துங்கள், தனக்கு லஞ்சமாக ரூ.46,000/- தரவேண்டும் என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு யோசித்து கட்டிட அனுமதி கொடுக்க லஞ்சமாக ரூபாய் 46,000/- பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. மேற்படி விபரத்தை வந்தனாவிடம் சொன்னேன். அவரும் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்று சொல்லி விட்டு, இது சம்மந்தமாக லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்க சொன்னார். பின்பு எனது செல்போன் 9495267510 எண்ணிலிருந்து எஞ்ஜினியர் திரு.பாலுசங்கரின் செல்போன் எண் 9677608474க்கு தொடர்பு கெண்டுபேசிய போது அவர் ஏற்கனவே ஆன்லைனில் விண்ணப்பித்திருந்த விண்ணப்பம் ரிஜெக்ட் ஆகிவிட்டதாகவும், எனவே மீண்டும் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், அதற்கு ரூ.1,653/- செலவாகும் என்று சொன்னார். நானும் திரு.பாலுசங்கரின் கூகுள் பே எண்ணிற்கு ரூ.1,653/- அனுப்பி புதிதாக விண்ணப்பிக்க சொன்னதன்பேரில் அவரும் விண்ணப்பித்துவிட்டு எனக்கு தகவல் சொன்னார். கட்டிட அனுமதி கட்டணம் விண்ணப்பம் அப்ரூவல் ஆன பின்புதான் ஆன்லைனில் செலுத்தமுடியும் என்று சொன்னார். பின்னர் வந்தனா ரூ.1,00,000/- எனது SBI

கணக்குக்கு அனுப்பி வைத்து, மீதி தொகையை என்னை கொடுக்கச்சொன்னார். இந்நிலையில் நான் நேற்று 09.01.2024ம் தேதி இரவு எஞ்ஜினியர் திரு.பாலுசங்கரை எனது செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது அவர் மொத்த பணத்தையும் அதாவது ரூ.1,05,250/-யும் ஊராட்சி தலைவர் திரு.சத்தியராஜிடமே கொடுத்துவிட சொன்னதாகவும், திரு.சத்தியராஜ் தனக்கு கூகுள் பே மூலம் ரூ.59,250/- அனுப்பி விடுவார் என்றும், தான் ஆன்லைனில் கட்டணத்தை செலுத்திவிடுவதாகவும் சொன்னார். பின்பு நான் ஊராட்சி தலைவர் திரு.சத்தியராஜ் அவர்களுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது அவரும் அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.59,250/-ம், அவருக்கு கொடுக்க வேண்டிய லஞ்சப்பணம் ரூ.46,000/- உடன் நாளை காலையில் அவரது அலுவலகத்திற்கு வந்து கொடுக்குமாறு சொன்னார். எனவே, என்னிடம் வந்தனா பெயரில் வீடு கட்ட கட்டிட அனுமதி வழங்க லஞ்சமாக ரூ.46,000/- கேட்ட குத்துக்கல்வலசை ஊராட்சி தலைவர் திரு.சத்தியராஜ் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு தமிழ் பேச தெரியும், எழுதத் தெரியாது. மேலும் மற்றவர்கள் தமிழ் பேசினாலும் புரிந்துகொள்ளவும் முடியும். ஆகவே இந்த விபரங்களை தங்களிடம் வாக்குமூலமாக கொடுத்தேன். படித்து காண்பித்தீர்கள். நான் சொன்னபடி சரியாக உள்ளது. , (ஒம்.V.S..ரெஜினீஸ் பாபு) 10/01/24. (REJANEESH BABU).

Sir, Recorded by me on 10/1/2024 at 08.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.02/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 10.01.2024 at 09.45 hrs. sd.Tmt.C.Jayasree, Inspector of Police, V&AC, Tenkasi. 10/1/2024.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C. JAYASREE
INSPECTOR OF POLICE
V&AC Tenkasi
10/1/24